Arumbu—Quarterly Newsletter from Tamil School of Missouri

# அரும்பு

தை, திருவள்ளுவராண்டு 2045 | January 2014 | இதழ் - 1

மிசௌரி தமிழ்ப் பள்ளி - Non-profit organization registered in state of Missouri

## இதழ் முன்னுரை

**பொற்செழியன், பள்ளித் தலைவர்**

*அன்பு நிறை மாணவக் கண்மணிகளே! ஆசிரியப் பெருந்தகைகளே! தன்னார்வலர்களே! பெற்றோர்களே! வணக்கம்!*

*இனிமையும், ஆற்றலும், அறிவும், குறும்பும், குதூகலமும் நிரம்பி வழியும்* ***அரும்புகள்தான்*** *வருங்கால உலகை வளமுள்ளதாக்கப் போகும் ஏறுகள். அமெரிக்க மண்ணில் எதிர்காலத்தில் தமிழர்களுக்கென்று எழுச்சியானதொரு சித்திரத்தை தீட்டப் போகும் இளைய தூரிகைகள். அத்தகு நம் செல்வங்களின் நாவில் நடமாடப் போகும் மொழி தான், நாளை இம்மண்ணில் தமிழ், வாழும் மொழியாக நிலைக்குமா? என்பதைத் தீர்மானிக்கும். அதற்கான அடிப்படைக் கட்டமைப்புத்தான் தமிழ்ப்பள்ளி.*

*ஆயிரக்கணக்கான நூற்களில் தேடிக்கிடைக்காத அறிவுச் செல்வங்கள், நமது தமிழ் நூற்களில் எங்கும் செறிந்துள்ளது. இவற்றை கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்கள், தன்னார்வலர்கள் வருங்கால உலகின் வளமான சிற்பிகளைச் செதுக்கும் பெருஞ்சிற்பிகள்.*

*அனைவருக்கும் இந்த முதல் மடலின் வாயிலாக வாழ்த்துக்களையும், நன்றியையும் உரித்தாக்குகிறேன். இனி பருவந்தோறும் அரும்பப் போகும் இந்த செய்தி மடல் மூலம் மாணவச் செல்வங்களும், ஆசிரியர்களும் நல்ல படைப்புக்களைப் படைத்தும், படித்து மகிழவும், பள்ளி நிகழ்வுகளை அனைவரும் அறிந்துகொள்ளவும் ஏதுவாகும்.*

*இவ்வருடம் நம் தமிழ்ப் பள்ளி இரண்டு பெரும் நிகழ்வுகளில் ஈடுபட்டுள்ளது.*

***1. பள்ளி அங்கீகாரம் பெறல்***

*நமது தமிழ்ப் பள்ளியை முறை சாரா கல்வி நிறுவனமாக அங்கீகரிப்பதன் மூலம், தமிழ்க்கல்வியை இம்மாநிலம் இரண்டாம் மொழியாக ஏற்கும் நிலை வெகு விரைவில் வரும். இதன் பொருட்டு நடைபெறும் முயற்சிகள், இதுவரை நடந்த மொழி சார்ந்த முயற்சிகளுள் தலையாயது. அதில், அனைவரும் முழு மூச்சுடன் ஈடுபட்டுள்ளோம். இம்முயற்சி உறுதியாக வெற்றிபெறும். இதன் மூலம் இம்மண்ணில் தமிழ் என்றும் நின்று நிலைக்கும். மாற்றங்களை வென்று வளரும்.*

***2. அமெரிக்க அளவிலான FeTNA பேரவைத் தமிழ் விழா***

*இவ்வாண்டு திட்டமிட்டுள்ள 2014 FeTNA தமிழ் விழாவை பெரும் வெற்றி பெற வைப்பதால், தமிழ்ப்பள்ளிக்கு நேரடி நன்மைகள் பல உள்ளன. நாடு தழுவிய அளவில் தமிழ்த் தேனீ, தமிழிசை, தமிழன் தமிழச்சி, சங்கங்களின் சங்கமம், கலை நிகழ்ச்சிகள் இவற்றில் பங்கேற்று உயர வாய்ப்புகள் அதிகம். மேலும், இவ்விழாவின் வெற்றியில் ஒரு பங்கு நிதி நம் பள்ளிக்கு, அதன் வளர்ச்சித் திட்டங்களுக்கு வழங்கப்பட இருக்கிறது. எனவே பள்ளி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, இந்த நல்ல வாய்ப்பை பயன்படுத்தி அனைவரும் தொடர்ந்து எல்லா வகையிலும் பங்களிப்போம்.*

*உலகு வியக்கும் இருமொழி மாந்தராய் ஒரு தலைமுறை உருவாகி, உலக முன்னோடிகளாய் நாளை நம் அரும்புகள், அதன் பெருமையில் நாம் என்ற உன்னத நிலை வெகுதொலைவிலில்லை.*

*தமிழ் மொழி போற்றுவோம்! தரணியில் உயர்வோம்!*

# தமிழ்த்தாய் வாழ்த்து



*நீராரும் கடல் உடுத்த நில மடந்தைக் கெழிலொழுகும்*
*சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்*
*தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்*
*தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே!*
*அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற,*
*எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே! தமிழணங்கே!*
*நின் சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!*
*வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!*

## பொருள்

*அலை கடலே ஆடையான இந்த அழகான பூமிப் பெண்ணிற்கு பாரத நாடே முகமாம்*
*தென்திசை அதன் நெற்றியாம்*
*அதில் திலகமென திகழ்வது திராவிட திருநாடாம்*
*அந்தத் திலகத்தின் வாசனைப் போல் அனைத்து உலகமும் இன்பம் காண*
*எல்லா திசையிலும் புகழ் மணக்க இருக்கும் தெய்வமகள் ஆகிய தமிழே!*
*என்றென்றும் இளமையாக இருக்கிற உன்னுடைய இந்த அழகைக் கண்டு வியந்து,*
*செய்யும் செயலையும் மறந்து வாழ்த்துகிறோம்! வாழ்த்துகிறோம்! வாழ்த்துகிறோம்!*

*தமிழ்த்தாய் வாழ்த்து என்பது இந்திய மாநில அரசுகளுள், தமிழை ஆட்சி மொழியாய் கொண்டுள்ளவற்றில் பாடப்படும் கடவுள் வாழ்த்துப் பாடலாகும். இப்பாடல் அரசு விழாக்கள், பள்ளிகளின் காலை வணக்கக் கூட்டம் மற்றும் உலகம் முழுவதும் உள்ள அனைத்து தமிழ் சங்க விழாக்கள், தமிழ் பள்ளிகள் ஆகியவற்றின் துவக்கத்தில் பாடப்படுகிறது.*

*தமிழக அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலை எழுதியவர் மனோன்மணீயம் பெ.சுந்தரனார் என்பவராவார். இவர் எழுதிய புகழ்பெற்ற நாடக நூலான மனோன்மணீயம் நூலில் உள்ள துதிப்பாடலின் ஒரு பகுதி இப்பாடலாகும். இப்பாடலை 1970ஆம் ஆண்டு, தமிழக அரசு தமிழ்த்தாய் வாழ்த்தாக அறிவித்தது.*

– ரேவதி திருநா


# பள்ளிச் செயல்பாடுகள்


**செந்தில் இராதாகிருஷ்ணன், பள்ளி இயக்குனர்**




வணக்கம்,

*மிசௌரி தமிழ்ப் பள்ளியின் முதல் காலாண்டு இதழை வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி. இந்த கல்வி ஆண்டில் நமது பள்ளியில் சுமார் 130 மாணவ, மாணவிகள் தமிழ் மொழியை நன்கு கற்றுத் தேர்ந்து வருகின்றனர். அனைத்து மாணவர்களும் முதலாம் பருவத் தேர்வை நிறைவு செய்து, வரும் மார்ச் மாதம் முதலாம் தேதி நடைபெற உள்ள இரண்டாம் பருவத் தேர்வுக்கு தயாராகிக் கொண்டிருக்கின்றனர். கடந்த கல்வி ஆண்டில் பெற்றோர்களிடம் இருந்து கிடைத்த பின்னூட்டத்தின் அடிப்படையில் இந்த ஆண்டு மாணவர்களின் தேர்ச்சி முறையில் பின் வருமாறு சில மாற்றங்கள் செய்துள்ளோம்.*



*கடந்த மாதம் பள்ளியின் புதிய இணையத்தளம் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் தேவையான பல முக்கிய தகவல்களுடன் தொடங்கப்பட்டுள்ளது. இணையத்தளத்தில் கொடுக்கப்பட்டுள்ள மாணவர்கள் கையேடு, பெற்றோர்கள் கையேடு போன்ற தகவல்களை அனைவரும் ஒரு முறை படித்து அறிந்து கொள்ளவும்.*

**Website: school.missouritamilsangam.org**

*பள்ளித் தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள முகநூல் பக்கமும் தொடங்கப்பட்டுள்ளது.*

**Follow us at Facebook: www.facebook.com/TamilSchoolofMissouri**

கடந்த இரண்டு ஆண்டுகளாக நமது பள்ளிக்கு தர மதிப்பீடு பெறும் முயற்சியில் அதற்கான செயல்பாடுகளை நன்கு திட்டமிட்டு செய்து வருகின்றோம். இந்த பணியை, சுமார் பத்துக்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் முன்னெடுத்து செல்கின்றனர். வரும் 25-ம் தேதி அதற்கான முதல் நிலை மேற்பார்வை AdvancEd என்ற தர மதிப்பீட்டு நிறுவனம் மூலம் நடக்க இருக்கிறது. இது வெற்றிகரமாக முடிந்தவுடன் அடுத்த கட்டமாக தர மதிப்பீடு நடைபெறும். இந்த முயற்சிக்கு, அனைத்து ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் உதவி மற்றும் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். பள்ளி நடத்தும் கூட்டங்களில் தவறாமல் கலந்து கொண்டு ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம். தர மதிப்பீட்டினால் கிடைக்கும் நன்மைகள் மற்றும் அதற்கான செலவு பற்றிய சுருக்கமான குறிப்பு கீழே தரப்பட்டுள்ளது.




**What is Accreditation?**

Accreditation is a voluntary method of quality assurance developed more than 100 years ago by American universities and secondary schools, and designed primarily to distinguish schools adhering to a set of educational standards. The accreditation process is also known in terms of its ability to effectively drive student performance and continuous improvement in education.

| Benefits | Effort | Cost |
|---|---|---|
| ✓ Streamlined school policies and procedures.<br>✓ Learning management system.<br>✓ Effective communication<br>✓ Tools and Technologies to support students learning experience.<br>✓ Using results for Continuous improvement.<br>✓ Actively involve all stakeholders in school activities.<br>✓ High school, second language credits.<br>✓ University, second language credits.<br>✓ Recognition for Tamil School in United States. | ✓ Commitment from School board to implement all the accreditation standard and process.<br>✓ Enormous volunteer hours from Accreditation compliance team.<br>✓ School Board to invest and setup learning management tools and techniques.<br>✓ Teachers to follow the accreditation standards and procedures.<br>✓ Students and Parents to adhere to accreditation standards and process. | ✓ One time AdvancEd application fee.<br>✓ Readiness Review, External review expenses.<br>✓ Accreditation training expenses.<br>✓ Learning management system license fee.<br>✓ Every year AdvancEd Accreditation Fee. |

*பள்ளியின் செயல்பாடுகளுக்கு உழைத்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் அனைவருக்கும் மிசௌரி தமிழ்ப் பள்ளியின் நன்றிகள். நமது பள்ளியின் முன்னேற்றத்திற்கு உங்களது ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை பள்ளியின் மின்னஞ்சல்* **school@missouritamilsangam.org** *என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.*

## பேசும் மொழி -நா. குருசாமி

ஓரினத்தின் ஒப்பற்ற அடையாளம், பேசும் மொழி. தமிழர்தம் அடையாளம், தாய்மொழியான செந்தமிழ். மொழியே பண்பாட்டிற்கும் அடிப்படை. நாம் திரைகடலோடித் திரவியம் தேட வந்த இங்கு நமது மொழியும், பண்பாடும் நமது குடும்பங்களில் பையப் பைய நலிந்து நசியாமல் பொலிவுற, வாழையடி வாழையாக நிலைத்து நிற்க, மிகவும் இன்றியமையாதது நம் மழலைகட்கு நாம் தரும் தமிழ் கல்விதான். இத்தகைய மகத்தான பணியைத் தன்னிச்சையுடன் ஏற்று, தமிழை விட நம் வாழ்வில் ஈட்டுவதற்கு "மாடல்ல மற்ற பிற" எனும் நல் உணர்வோடு, கேடில் விழுச்செல்வமான தமிழ்க்கல்வியை போதிக்கும் அறப்பணியாம் ஆசிரியப்பணியை, ஒல்லும் வகையான் ஓவாது ஆற்றும் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள், அவர்கட்கு உறுதுணையாய் உதவும் தமிழ் தொண்டர்கள் அனைவரையும் செயிண்ட் லூயிஸ் வாழ் தமிழ் சமுதாயத்தின் சார்பாக செய்நன்றி அறிதலோடு, பாராட்டி மனமார வாழ்த்துகிறேன்! இவர்தம் தியாகத்தால் இங்கு வாழ் தமிழ் குடும்பங்களில் தமிழ் தீபம், என்றும் அணையா தீபமாய் சுடர்விடும்.

**விதைப்போம்; வளர்ப்போம் தமிழ் மொழி!**
**காப்போம் தமிழர் அடையாளம்!!**

## எனக்கு பிடிச்ச தமிழ் மொழி! -ஹரிணி திருநா



எனக்கு தமிழ் பள்ளி வர்றதுக்கு ரொம்ப பிடிக்கும். ஒவ்வொரு வகுப்பிலும் ஆத்திசூடி, திருக்குறள், பாடல், கதை, படப்பெயர்கள், புதுப்புது வார்த்தைகள் எல்லாம் என்னோட ஆசிரியர்கள் சொல்லிக்குடுக்குறாங்க. அம்மா, அப்பா உதவியுடன் வீட்டுப்பாடம் செய்றதும் ரொம்ப பிடிச்சிருக்கு. இந்தியால இருக்கிற தாத்தா, பாட்டி, சொந்தக்காரங்க, இங்க என்னோட நண்பர்கள் எல்லாரோடயும் **நல்லா தமிழ்ல பேச முடியுது. இனிமே, நல்லா எழுதவும் முடியும்.** கதையில வர்ற இளவரசி மாதிரி, பொங்கல் விழாவில **இளவரசியும், 4 காலங்களும்** நாடகத்தில, இளவரசியா பேசி நடிச்சது ரொம்ப சந்தோஷமா இருக்கு. அதனால எனக்கு பிடிச்ச மொழி, தமிழ் மொழி!

**எங்கள் மொழி நல்ல மொழி! இனிமையாகப் பேசும் மொழி!**



### மலர்களின் பருவநிலைத் தமிழ்ப்பெயர்கள்

1. **அரும்பு** – அரும்பும் (தோன்றும்) நிலை
2. **நனை** – அரும்பு வெளியில் நனையும் நிலை
3. **முகை** – நனை முத்தாகும் நிலை
4. **மொக்குள்** – "முகை மொக்குள் உள்ளது நாற்றம்" – திருக்குறள் (நாற்றத்தின் உள்ளடக்க நிலை)
5. **முகிழ்** – மணத்துடன் முகிழ்த்தல்
6. **மொட்டு** – கண்ணுக்குத் தெரியும் மொட்டு
7. **போது** – மொட்டு மலரும் பொழுது காணப்படும் புடைநிலை
8. **மலர்** – மலரும் பூ
9. **பூ** – பூத்த மலர்
10. **வீ** – உதிரும் பூ
11. **பொதும்பர்** – பூக்கள் பலவாகக் குலுங்கும் நிலை
12. **பொம்மல்** – உதிர்ந்து கிடக்கும் புதுப்பூக்கள்
13. **செம்மல்** – உதிர்ந்த பூ பழம்பூவாய்ச் செந்நிறம் பெற்று அழுகும் நிலை

## நிழலா? நிஜமா?

- மலர்விழி வேல்முருகன்
& சுனிதா ஜோதிலிங்கம்

பாட்டுக்கு வழி காட்டிய
மகாகவியே,
உன் நாவுக்கு எங்கள் சமர்ப்பணம்!
கவிதைக்கே கவிதை சொன்னோம்
பாரதியார் பற்றி.
நெற்றி மீது பொட்டு வைத்து,
முறுக்கு மீசை சுற்றி வைத்து,
நாவையே பேனாவாக கொண்ட
மகாகவியே,
சுற்றி வரும் பூமியை ஒற்றை
சொல்லால்
நிற்க வைத்த கவிஞனே,
நீ இல்லை என்ற வருத்தம்
இல்லாது
நீ விட்டுச் சென்ற பாடல்களை
நாங்கள் காட்டினோம் நிழலாய்!
கண்டோர் உணர்ந்தனர் நிஜமாய்!!



## வள்ளுவருக்கு உருவம்

பிரியா ஞானசிவம்

**கடுகை துளைத்தேழு கடலைப் புகட்டி**
**குறுகத் தறித்த குறள் - ஔவையார்**


**எல்லாப்பொருளும் இதன்பால் உள; இதன்பால்**
**இல்லாத எப்பொருளும் இல்லையால் - மதுரை தமிழ்நாகனார்**

என்றெல்லாம் போற்றப்படும் திருக்குறள் என்று நினைத்தவுடன் நம் மனக்கண்ணில் தோன்றுவது திருவள்ளுவரின் உருவமே.

அந்தத் திருவள்ளுவருக்குத் தூரிகையால் உயிர் கொடுத்து உலவவிட்டவர் ஓவியர் கே.ஆர்.வேணுகோபால் சர்மா. அவர், திருவள்ளுவர் ஓவியத்தை வரைந்து 50 ஆண்டுகள் ஆகின்றன. பல வருடங்களாக திருவள்ளுவரை வெவ்வேறு உருவங்களில் வரைந்து பார்த்து இருக்கிறார். 40 ஆண்டு கால தவத்துக்கு வரம் கிடைத்ததுபோல, ஒருநாள் தூரிகையால் வள்ளுவனை வரைந்தும் விட்டார். ஒருநாள் அவருடைய நண்பர், பாரதிதாசன் வீட்டுக்கு வந்தபோது, 'அங்கு இருக்கும் திரையை விலக்கிப் பாருங்கள்' என சொல்ல, பாவேந்தர் திரையை விலக்கியவுடன் சொன்ன முதல் வார்த்தை... 'அட, நம்ம வள்ளுவன்!' என்று. பாவேந்தரே ஏற்றுக்கொண்ட பிறகுதான் கே.ஆர்.வேணுகோபால் சர்மா அவர்களுக்கு, நிம்மதி ஏற்பட்டது. 1964-ம் ஆண்டு பக்தவத்சலம் முதல்வராக இருந்த போது, ஜனாதிபதி ஜாகீர் உசேனால் சென்னை சட்டசபையில் திருவள்ளுவர் ஓவியம் திறந்து வைக்கப்பட்டது. அந்த திருவள்ளுவர் உருவம்தான் உலகமெங்கும் பரவியது. பிறவிப் பலனை அடைந்துவிட்டோம் என மனமகிழ்ந்தார். பொன் விழா கொண்டாடும் வள்ளுவன் திருவுருவத்துக்கு உருவம் தந்த கே.ஆர்.வேணுகோபால் சர்மா அவர்களை நாம் அனைவரும் போற்றுவோம்.



(குறிப்பு: ஆனந்த விகடன் இதழில் இருந்து தொகுக்கப்பட்ட செய்தி)



# அறம்

சாவித்திரி ரெங்கநாதன்

***அறம் செய்ய விரும்பு*** - *ஆத்திசூடி, 1*

*மனிதராகப் பிறந்த எல்லோருக்கும் பசி, தாகம் இருக்கிறது. அவர்கள் வசிக்க ஓரிடம் வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் மனிதன் வசதி செய்துகொள்ள வேண்டும். ஏதோ ஒரு தொழிலைச் செய்தே இதற்கு வசதி செய்து கொள்கிறான். அத்தியாவசியமான சுய தேவையைப்பூர்த்தி செய்துகொள்வதோடு ஒவ்வொரு மனிதனும் பிறர் விஷயமாகச் சில கடமைகளையும் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. தன்னுடைய சமுதாயம், தேசம் இவற்றுக்கெல்லாம் மனிதன் கடமை ஆற்றவேண்டியிருக்கிறது. பல விதத்தில் சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். பலவிதத்தில் வீடு, நாடு இவற்றுக்கான கடமைகளைச் செய்யலாம். ஆனால் மனத்துக்குத் தோன்றியபடியெல்லாம் இவற்றைச் செய்யாமல், எவருக்கும் தீங்கு விளைவிக்காத விதத்தில், அதீதமான ஆசையும் கோபமும் கலக்காமல் செய்ய வேண்டும்.*



***அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்***
***இழுக்கா இயன்றது அறம்.*** - *குறள்*, 35

*பிறர் மேன்மை கண்டு பொறாமை, புலன்கள் போகும் வழிச் செல்லும் ஆசை, இவை தடைபடும் போது வரும் கோபம், கோபத்தில் பிறக்கும் தீய சொல் எனும் இந்நான்கையும் விலக்கித் தொடர்ந்து செய்யப்படுவது அறம்.*

*தன்னையும் மேம்படுத்திக்கொண்டு அனைவரையும் உயர்த்துகிற விதத்தில் தொழிலையும், கடமையையும் செய்ய முடியும். இவ்வாறு சம்பந்தப்பட்ட அனைவரது ஆத்ம அபிவிருத்திக்கும் அனுசரணையாக இருக்க உலக காரியங்களைச் செய்வதற்குத்தான் அறம் (தர்மம்) என்று பெயர்.*

*மூலக் கருத்து - தெய்வத்தின் குரல் (முதல் பாகம்) என்ற நூலில் இருந்து*





# மெருகேற்றுவோம்!

**மீனா கணபதி**

ஒரு நாட்டின் பொருளாதாரத்தை கணக்கிடும் வளங்களில், அதிக விலை மதிப்புள்ள பொருட்களாக தங்கமும், வைரமும் விளங்குகின்றன. ஆனால் அடிப்படையில், ஆரம்பத்தில் இவை இரண்டும் பூமிக்கடியில் கல்லாகவும், கரியாகவும் தான் இருக்கிறது. அவை கண்டுபிடிக்கப்பட்டு, தரம் பிரிக்கப்பட்டு, மெருகேற்றப்பட்ட பிறகே, விலை மதிப்புமிக்கவையாக மாற்றப்படுகின்றன.

கல்லும், கரியுமே மதிப்புமிக்கவையாக மாறும் பொழுது, ஆறறிவு படைத்த அருமைக் குழந்தைகளை அரும்பெரும் சாதனையாளர்களாய் மாற்றுவது சாத்தியமில்லையா, என்ன? தங்கத்துக்கும், வைரத்துக்கும் எப்படி அதன் மதிப்பு தெரியாதோ அதே போல், நம் குழந்தைகளுக்கும் அவர்களுடைய எண்ணற்ற ஆற்றலும், திறனும் தெரியாது. அவர்களுக்குள் பொற்குவியலாய் புதைந்திருக்கும் அறிவையும், ஆற்றலையும் வெளியே கொண்டு வரவேண்டியது நம் பொறுப்பு. நம் அவசரத்தையும், பொறுமையின்மையையும், எதிர்பார்ப்புகளையும் குழந்தைகள் மேல் திணிக்கலாகாது. ஒரு குழந்தையின் எண்ணங்களையும், உணர்வுகளையும் புரிந்து கொள்ள வேண்டுமானால், அக்குழந்தையின் நிலைக்கு இறங்கி, சமமாக வர வேண்டும். வயதுக்கு மீறிய சுமைகளால் அவர்களது மன அழுத்தத்தை அதிகரிக்கலாகாது.

"வீட்டுப் பாடம் செய், படி, எழுது" என்று பிள்ளைகளிடம் சொல்வதை விட, "வா, வீட்டுப்பாடம் செய்வோம்" என்று சொல்லிப்பாருங்கள், பலன் தெரியும். நம் பிள்ளைகள் எப்படி செயல்பட வேண்டும் என்று நினைக்கிறோமோ, அதன்படி, முதலில் நாம் நடந்து காட்டுவோம்.

கல்லோ அல்லது கரியோ, அது பொறுமையுடன், பொறுப்புடன் செதுக்கப்படும் போதும், மெருகேற்றப்படும் போதுதான் அழகிய சிற்பமாகவோ, தங்கமாகவோ, வைரமாகவோ மாறுகிறது. அந்த மந்திரக்கோல் பெற்றோர்களாகிய நம்மிடமே உள்ளது.

நம் பிள்ளைகளைப் புரிந்து கொள்வோம். அந்த அருமைச் செல்வங்களை தங்கங்களாய், வைரங்களாய் மெருகேற்றி, மிளிரச் செய்வோம்!

**வாழ்க, வளர்க, நமது எதிர்கால சாதனையாளர்கள்!**


வட அமெரிக்க தமிழ்ச்சங்கப் பேரவையும்
மிசௌரி தமிழ்ச் சங்கமும்
இணைந்து நடத்தும்

வட அமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவையின் 27-ஆம் ஆண்டு விழா
2014ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4,5 தேதிகளில்
செயின்ட் லூயிஸ் பெருநகரப் பகுதியில் இருக்கும்
Chaifetz Arena-வில் கொண்டாடப்பட உள்ளது.

இவ்விழாவில் தமிழ் அறிஞர்கள், ஆர்வலர்கள், கலைஞர்கள் மற்றும் தொழில் அதிபர்கள்
பலர் உலகெங்கும் இருந்து திரண்டு வந்து சிறப்பிக்க உள்ளார்கள்.
விழா நிகழ்ச்சிகள் பற்றிய விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்.
இவ்விழாவில் குடும்பத்துடன் கலந்துகொண்டு சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறோம்.

**www.fetna2014.com**

# ஒப்புரவு ஒழுகு -ரம்யா ஜானகிராம்

*அண்மையில் மிசௌரி தமிழ்ச் சங்கம் நடத்திய பொங்கல் விழா நிகழ்ச்சிகளில் ஒன்று விவாத மேடை – அமெரிக்க வாழ்க்கை அதிகமாக மாற்றியது ஆண்களையா அல்லது பெண்களையா? என்ற தலைப்பில். இதை பால் ரீதியாக பிரிக்காமல், அத்தகைய மாற்றம் வரவேற்கத்தக்கதா? என்று ஆராய்வதே சிறந்தது என்று தோன்றியது.*

*அந்த தருணத்தில் அருந்தமிழ் புலவர் ஔவையின் ஆத்திசூடி ஒன்று நினைவுக்கு வந்தது. "ஒப்புரவு ஒழுகு" என்பதே அது. இதன் விளக்கம்: "ஊரோடு ஒத்து வாழ். உலகத்தோடு பொருந்த நடந்துகொள்". வாழ்க்கைக்கு மிகவும் பயனுள்ள இந்த கருத்து, மாற்றம் என்பது இன்றியமையாதது என்பதை உணர்த்துகிறது அல்லவா? மனிதனின் பரிணாம வளர்ச்சிக்கு முக்கிய காரணமே அவன் படிப்படியாக மாறியது தானே?*

*வேளாண்மையில் நாற்று நடுதல் என்ற பணி உள்ளது. புதிதாக முளைத்த இளம்பயிரைப் பெயர்த்து வேறொரு இடத்தில் நடுவார்கள். பிறகு அந்த பயிர் தன் புது நிலத்தின் தன்மையை ஒத்து வேரூன்றி வளரும். புலம் பெயர்ந்து வந்த நாம் ஒவ்வொருவரும் இந்த நாற்றை போல் தான். நம் பிறந்த இடமான இந்தியாவை விட்டு அமெரிக்க நாட்டிற்கு வந்த பிறகு இங்குள்ள மனிதர்களையும், கலாச்சாரத்தையும், மொழியையும் அரவணைத்து, அதற்கேற்ப நம்மை மாற்றிக் கொண்டு வாழ்கிறோம். அப்படி நாம் மாறக் காரணம் என்ன?*

*எத்தனை வளங்கள் இருப்பினும், மனித வளத்தையே பிரதானமாக எண்ணும் இந்த நாட்டில் நமக்குக் கிடைத்த வாய்ப்புகள் தான் முதல் காரணம். இந்த நாட்டில் வகுப்பு பேதம் இன்றி, நிறம் மற்றும் இன பேதம் இன்றி, எந்த வயதினரும் அரசாங்க ஊக்கம் பெற்று தம் கல்வியை தொடரலாம், புதுக் கலைகளை கற்கலாம், தொழில் முனைவோர் ஆகலாம். இரண்டாவதாக, இங்கு விடாமுயற்சியையும், உழைப்பையும் மூலதனமிட்டு செயல்படுவோரின் முன்னேற்றத்திற்கு வானம் தான் எல்லை. மூன்றாவதாக, "**ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை காண்**" என்பதை ஆணித்தரமாக உணர்த்தும் வகையில் இந்நாட்டின் கொள்கைகள் அமைந்திருப்பதால், நம் நாட்டினர் தன்னம்பிக்கையும் துணிச்சலும் பெருகி பலதுறைகளிலும் பிரகாசிக்-கின்றனர். உதாரணமாக, எந்த வயதிலும் ஒரு பெண் சாதிக்கலாம்; ஆணைச் சார்ந்து வாழ்வதற்கு மாறாக ஆணின் வெற்றிக்கு உறுதுணை ஆகலாம் என்பதை எனக்கு உணர்த்தியது என் அம்மா. இந்தியாவில் வாழ்ந்த போது இல்லத்தரசியாக மட்டுமே இருந்தவர், தம் நாற்பதாம் வயதில் இங்கு வந்த பிறகு முதன்முறையாக வேலைக்கு சென்று என் தந்தைக்கு பொருளாதார ரீதியிலும் தோள் கொடுத்தார். தன்னுடைய திறமையை வெளிப்படுத்த கிடைத்த வாய்ப்பை வெற்றிகரமாக பயன்படுத்திக் கொண்டு எனக்கு ஒரு முன்னோடி ஆனார். ஆக, எல்லாருக்கும் அடிப்படைக் கல்வி, தகுதியுள்ளோருக்கு எந்த பேதமும் இன்றி வேலை வாய்ப்பு, பெண்களுக்கு சம உரிமை, பாதுகாப்பு, சுதந்திரம் என்று பல முற்போக்கு கொள்கைகள் கொண்ட சமுதாயத்தில் நாம் மட்டும் மாறாமல் இருக்க முடியுமா?*

*எந்த ஒரு சமுதாயத்திலும் நல்லவையும் தீயவையும் கலந்தே இருக்கும், ரோஜாச் செடியில் இருக்கும் முட்களை போல. அப்படி மனதை நெருடும் மாற்றங்களும் இந்த சமுதாயத்தில் காணப்படுகின்றன. உதாரணமாக இங்கு "peer pressure" என்பது பெண்களை பள்ளி பருவம் முதலே வெகுவாக பாதிக்கிறது. நாகரிகம் என்ற பெயரில் கல்வி பயில வந்த இடத்தில் முக ஒப்பனை, விதவிதமான ஆடை அணிகள் என்று குழந்தைகளின் கவனம் சிதறுவது வேதனைக்-குரியது. இது தவிர பச்சைக் குத்திக் கொள்வது, மது அருந்துவது, திருமணத்திற்கு முன்பு சேர்ந்து வாழ்வது என்று இளம் தலைமுறையினர் இங்குள்ள கலாச்சாரத்தின் பிரதிநிதிகளாக தம்மைப் பாவித்து நடப்பதும் வருந்த வைக்கும் விஷயம் தான். இவர்களை நெறிப்படுத்துவதில் பெற்றோரும், ஆசிரியர்களும் பெரும் பங்கு வகிக்கிறார்கள். சமுதாயத்தின் நல்லது கெட்டதை பகுத்தறிவோடு சிந்திக்க வைத்து, அன்னப் பறவை பாலையும் தண்ணீரையும் பிரித்து அருந்துவது போல் செயல்படுமாறு குழந்தைகளுக்கு அறிவுறுத்துவது இவர்கள் கடமை.*

*(அடுத்த பக்கம் பார்க்க..)*

இந்த கடமையை உணர்ந்தே நம்மில் பெரும்பாலானோர் இந்த நாட்டிற்கு வந்து பல புதிய விஷயங்களை கற்றாலும், கடைப்பிடித்தாலும், பிறந்தது முதலே நம்மை வழிப்படுத்திய, நம் வாழ்வியலுக்கு அஸ்திவாரமான இந்திய பண்பாட்டையும், கலாச்சாரத்தையும், இன்னும் விட்டு விலகவில்லை. மாறாக அவற்றை மேலும் இறுக பற்றிக் கொண்டு இருக்கிறோம். இதற்கு உதாரணம் நமது தமிழ் சங்கம் மற்றும் தமிழ் பள்ளி மூலம் நாம் நடத்தும் நிகழ்ச்சிகள். நாம் இந்த நாட்டில் பல்லாண்டுகளாக வாழ்ந்து குடியுரிமைப் பெற்றாலும், நம் சந்ததியினர் இங்கேயே பிறந்தவர் ஆயினும், அடிப்படையில் நாம் எல்லாரும் இந்தியரே. இங்கு உள்ளவர்களும் நம்மை அவ்வாறே பார்க்கிறார்கள், பார்ப்பார்கள். இந்த அடையாளம் தான் நம்முடைய பலம். என்று நாம் அதைத் துறக்க தயாராகிறோமோ, அன்று நாம் முகம் தொலைந்தோர் ஆகிவிடுவோம். இந்த புரிதல் உள்ளவரை நாம் அடையும் ஒவ்வொரு மாற்றமும் நம்மை மேலும் சிறக்க வைக்குமே தவிர வீழ்த்தாது. அத்தகைய இன்றியமையாத மாற்றத்தை இன்முகத்துடன் வரவேற்போம்!



## வேற்றுமையிலும் ஒற்றுமை

**மழலை குழந்தைகள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள்**

மண்ணிலே கருவாகி, மண்ணிலே உருவாகி மண்ணையே சுவாசிப்பவன் உழவன். அவன் மண்ணிற்கும், மக்களுக்கும் தலைவன். அந்த உன்னதமான உழவுத்தொழிலைச் செய்யும் விவசாயப் பெருமக்களுக்கு நாம் நன்றி சொல்லும் இனிய நாள், பொங்கல் திருநாள்.

இந்தப் பொங்கல் திருநாள், தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், விவசாய நாடான இந்தியா முழுவதும், வெவ்வேறு மாநிலங்களில், *MaharaSankaranthi, Lohri, Patang Mahotsav, Onam* போன்ற வேறு வேறு பெயர்களில், வேறு வேறு காலங்களில் கொண்டாடப்படுகிறது. அனைத்து மாநில விவசாய மக்களுக்கும் நன்றி சொல்லும் வகையில், ஆஸ்கார் தமிழன் ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்த தேசிய உணர்வோடு கூடிய, ஒரு அருமையான தமிழ்ப்பாடலுக்கு நம் மழலை செல்வங்கள் தமிழ் சங்கத்தின் வரலாற்றிலேயே முதல் முறையாக மேடையேறி, ஆடிப்பாடி எல்லோரையும் மகிழ்வித்தார்கள். வேற்றுமையிலும் ஒற்றுமை காண்போம் என்பதை நம் மழலை செல்வங்கள் கண் நிறைந்த, வண்ணமயமான இந்நிகழ்ச்சியின் மூலம் நிரூபித்தார்கள்.

# மலரும் பொங்கல் நினைவுகள்

புவனா நந்தகுமார்

மேற்கு தொடர்ச்சி மலைகளின் அடிவாரத்தில், என்றும் நிழல் தரும் மேகங்கள் சூழ, பன்னீராய் தூவும் தூறல்களுடன், பசுமைக்கு பஞ்சம் வராத ஊர், எங்கள் மதுக்கரை.

இந்த ஊரில், எங்கள் தோட்டத்தில்தான் என் இளமைக்-காலப் பொங்கல். தை மாதத்தில் அல்ல, மார்கழியிலேயே துவங்கி-விடும் பொங்கல். காலை மலரும் பொழுது நான்கு மணியளவில், ஊர் காவல்காரன் சங்கும், சேகண்டியுடனும் உலா வருவான். அவனது சத்தம் இன்னும் எனது காதுகளில் கேட்டுக்கொண்டே இருக்கிறது. அனைத்து பெண்களும், விடிவெள்ளியுடனே கண் விழிப்பர். பனிக்கொட்டும் மார்கழியில், குளித்து தலைவாரி, வாசலிலே சாணம் கொண்டு பிள்ளையார் பிடிப்போம். அதன் தலையில் ஒரு பூசணிப்பூ. இப்படியாக மார்கழி முழுவதும் கழியும்.

இதோ, வந்து விட்டது தை. ஊரே விழாக் கோலம் பூணும். ஒரு வீடு தவறாமல் வெள்ளை அடித்து, சாணம் மெழுகி, கோலம் இடுவோம். இதில் என் கோலம் சிறந்ததா? உன் கோலம் சிறந்ததா? என்று போட்டி வேறு. அறுவடை முடிந்து வயல் வெளியெல்லாம் பச்சை தாவணி கழட்டி, மஞ்சள் சேலைப் போர்த்திக்கொள்ளும். கரும்பும், மஞ்சளுமாய் கழனி-யெல்லாம் நிறையும். சிறு பிள்ளைகளான நாங்கள், மாட்டையும், ஆட்டையும் பிடித்துக் கொண்டு குளிக்க வைப்போம். எங்கள் அண்ணன்கள் அதன் கொம்புகளுக்கு பச்சை, மஞ்சள் என்று வண்ணம் தீட்டுவர்.

போகி அன்று அனைத்து பழையதையும் எரித்து, குளிர் காய்வோம். சைக்கிள் டயர்களில் பந்தம் கொளுத்தி சுற்றுவார்கள். பார்க்க வியப்பாய் இருக்கும். வீட்டின் அனைத்து மூலைகளிலும் வேப்பிலையை சொருகி வைப்போம். மறுநாள் காலை, தை அன்று, தன்னிகரற்ற ஆதவனை வணங்குவோம். புதுப்பானையில் பச்சரிசியில் பொங்கல் வைத்து, பூவால் பட்டி கட்டி, அந்த பட்டிக்குள் பசுவை விடுவோம். அதன் கால் அடிபடுவதை வைத்து, அந்த வருடத்து ஜோசியம் சொல்லும் எந்தன் பாட்டி.

கரும்பு தின்று வாயெல்லாம் புண்ணாய்ப் போகும் எங்களுக்கு. எங்கள் தாத்தா கூடை நிறைய பழங்களைப் போட்டு, வானத்தில் விட்டெறிவார். யாருக்கு கிடைக்கிறதோ, அந்த பழம் அவர்களுக்கு. வெகு விளை-யாட்டாய் இருக்கும். அந்தநாள் பொழுது இப்படியாகப் போகும்.

பூப்பறிக்கும் நாள், ஆம் எங்கள் ஊரில் அப்படித்தான் சொல்வார்கள். ஒரு பெரிய மலையிருக்கும். மலையையே மூடியிருக்கும் ஆவாரம்பூ. ஊரின் பெரியவர்கள் அனைவரும் வீட்டி-லிருக்க, இளவட்டங்கள் பூ பறிக்க மலைக்கு செல்வார்கள். கேலியும், கிண்டலுமாய் மாட்டுவண்டியில், மூணு கண்ணு பாலத்தை தாண்டி மலைக்குச் செல்வோம். ஜல், ஜல் என்று ஒலி எழுப்பி, துள்ளி குதித்துச் செல்லும் காளைகள். ஆவாரம்பூ கொத்துகளுடன் மதியம் வீடு வந்துச் சேர்வோம். வடை, பாயாசத்துடன், உறவுகளின் உரை -யாடலுடன் உல்லாசமாய் கழியும் அன்றையப் பொழுது.

மூன்றாம் நாள் நவக்கரையில், மாலக்கோயிலில் ஆரம்பிக்கும் மாடுபிடி ஆட்டம். அப்பப்பா!!! என்ன கூட்டம், என்ன கூட்டம்! கூச்சலும், கூட்டமுமாய், காளை-களை விரட்டுவார்கள், வேட்டி கட்டிய நம் காளைகள். மண்ணும், புழுதியுமாக ஓய்ந்து, மாலைப் பொழுது திரும்பி வருவோம் வீட்டிற்கு.

பாலக்காட்டு கணவாய் வழியாக வீசும் சாரலால் என்றும் நிலத்தில் பாசமும், மக்கள் உள்ளங்களில் நேசமும் வாழும் ஊர். அக்கால நிகழ்வுகள் நினைவுகளாய் மாறிப்போனாலும், நெஞ்சில் நீங்கா இடம் பெற்றுள்ளது.

# நம் பூமி நம் கையில்

ஜெயஸ்ரீ ஆனந்த்



*இன்று நாம் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளில் முதன்மையானது சுற்றுச் சூழல் சீர்கேடு. நம்மைச் சுற்றியிருக்கும் இயற்கை வளம் நிரம்பிய மரங்கள், காய்கள், பயிர்கள், வயல்வெளிகள், பூக்களென்று நம்முடைய சுற்றுப்புறம், நம் கண்களை விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டு வருகிறது.*

*முன்னேற்றம் அதனுடனே பயணிக்கிற நாகரீகம் ஆகியவைகளுடைய ஆதிக்கத்தால் காடுகள் அழிந்து கொண்டு வருகிறது. இதனால் இயற்கை தன் அழகை மட்டுமல்ல, தன் உடைமையையும் சிறிது சிறிதாக இழந்து கொண்டிருக்கிறது.*

*இந்த கருத்தினை மையப்படுத்தி மிசௌரி தமிழ் பள்ளி ஓ'பாலன் கிளையில் படிக்கும் மாணவர்கள்* ***"நம் பூமி நம் கையில்"*** *என்ற மேடை நாடகத்தை மிகவும் சிறப்பாக மிசௌரி தமிழ் சங்க பொங்கல் விழாவில் ஜனவரி 26-ம் தேதி மாலை 4 மணியளவில்* Fort Zumwalt East *உயர்நிலைப் பள்ளியில் அரங்கேற்றினார்கள்.*

*மழலை முதல் நிலை 5 வரை படிக்கும் 36 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒருசேர நாடகத்தில் பங்கேற்றது இதன் தனிச்சிறப்பு. அனைத்து மாணவர்களும், அவரவர் பங்கை உணர்ந்து நடித்திருந்தார்கள்.*

*நாடகத்தின் இறுதியில் இப்பூமியை காப்பது, நம் ஒவ்வொருவரின் கையில் உள்ளது என்றும், மீள் சுழற்சி (*Recycle*), மீண்டும் பயன்படுத்துதல் (*Reuse*), பயன்பாட்டைக் குறைத்தல் (*Reduce*), உலக வெப்பமயமாதலை தடுத்தல், மழை நீர் சேமிப்பு மற்றும் மாசடைதலைத் தடுத்தல்* (Prevent pollution) *ஆகியவைகளை பின்பற்ற வேண்டும் என்ற நல்ல கருத்தை குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல், பெரியவர்களுக்கும் மிகவும் நேர்த்தியாக உணர்த்தினார்கள்.*

***வாருங்கள் சுற்றுப்புறத்தை பாதுகாப்போம்! இயற்கையை நேசிப்போம்!! இந்த பூமியை காப்போம்!!!***





**Tamil School of Missouri Newsletter**
**Arumbu—Edition 1, January 2014**

Editor: Mrs. Sunitha Jothilingam

Sub-Editor: Mrs. Revate Thruna

Newsletter Design: Mr. Sivakumar Selvaraju

## Executive Committee

President: Mr. Porchezhian Ramaswamy

School Director: Mr. Senthil Radhakrishnan

Development Director:
Mr. Elango Thirupathy

## Administrative Office

Mrs. Meena Ganapathy

Mrs. Priya Sridhar

Mrs. Priya Gnanasivam

Principal: Mr. Alagendran Sundarrajan

Secretary: Mr. Dhanabal Radhakrishnan

Treasurer: Dr. Jothilingam Sivapackiam

Course Director:
Mrs. Bhuvaneshwari Nandakumar

**மிசௌரி தமிழ் பள்ளி செய்திமடல்**
**அரும்பு-இதழ்-1, தை, திருவள்ளுவராண்டு 2045**

*ஆசிரியர்: திருமதி. சுனிதா ஜோதிலிங்கம்*

*இணையாசிரியர்: திருமதி. ரேவதி திருநா*

*செய்திமடல் வடிவமைப்பு: திரு. சிவகுமார் செல்வராஜு*

## செயற்குழு நிர்வாகிகள்

*தலைவர்: திரு. பொற்செழியன் ராமசாமி*

*பள்ளி இயக்குனர்: திரு. செந்தில் இராதாகிருஷ்ணன்*

*வளர்ச்சிப் பணி இயக்குனர்:*
*திரு. இளங்கோ திருப்பதி*

## நிர்வாக அலுவலகம்

*திருமதி. மீனா கணபதி*

*திருமதி. பிரியா ஸ்ரீதர்*

*திருமதி. பிரியா ஞானசிவம்*

*முதல்வர்: திரு. அழகேந்திரன் சுந்தர்ராஜன்*

*செயலாளர்: திரு. தனபால் இராதாகிருஷ்ணன்*

*பொருளாளர்: முனைவர். ஜோதிலிங்கம் சிவபாக்கியம்*

*பாடத் திட்ட இயக்குனர்:*
*திருமதி. புவனேஸ்வரி நந்தகுமார்*




## நன்றி

**தமிழ்ப் பள்ளியின் அரும்பு மலர் வெளிவர பெரிதும் உதவிய இதழ் ஆசிரியர் திருமதி. சுனிதா ஜோதிலிங்கம், இணையாசிரியர் திருமதி. ரேவதி திருநா, இதழ் வடிவமைப்பாளர் திரு. சிவகுமார் செல்வராஜு மற்றும் பள்ளியின் செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் தமிழ்ப் பள்ளியின் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.**


Colourful bloom of Gloriosa Lily-botanical name is 'Gloriosa superba', in Tamil called as `Karthigaipoo', the **State flower of Tamilnadu**